# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

CC No.416/2022

| | |
|---|---|
| | Prosecution PW 5 |
| Deposition of Witness for | Defence |
| | Court |

| | | |
|---|---|---|
| Name | : | பிரேம்குமார் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 24.06.2024

**எதிரி ஆஜரில்லை. 317 குவிமுசவின் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது செங்குந்தபுரத்தில் குடியிருந்து சொந்தமாக வியாபாரம் செய்து வருகிறேன்.

என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரிலுள்ள முதல் கையொப்பம் என்னுடையது. என்னுடன்

ஒம்/.எஸ்.பி.பரத் குமார்
நீதித்துறை நடுவர் எண்.1,
கரூர்.

பாலகண்ணன் என்பவர் கையொப்பம் செய்தார். கடந்த 02.08.2018ம் தேதி கரூர் நகர போலிசார் கௌரிபுரம் கங்கா பார்சல் சர்வீசிற்கு வந்து சம்பவம் நடந்த இடத்தைப் பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்தனர். சம்பவ இடத்தில் தயார் செய்த பார்வை மகசரில் நானும், பாலகண்ணனும் கையொப்பம் செய்து கொடுத்தோம். **அந்த பார்வை மகசர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)**

காயம்பட்ட நபர்கள் யாரென்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். கங்கா பார்சல் சர்வீஸ் என்பது திறந்தவெளி இடம் என்றால் சரிதான். சம்பவம் நடந்து மூன்று நாட்கள் கழித்துதான் சம்பவ இடத்திற்கு சென்றோம் என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு மேற்கேயும், வடக்கேயும் பொதுமக்கள் செல்லும் சாலை உள்ளது என்றால் சரிதான். நான் சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்யவில்லை என்றாலும், காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றாலும் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/.எஸ்.பி.பரத் குமார்
நீதித்துறை நடுவர் எண்.1,
கரூர்.

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

CC No.416/2022

| | | |
|---|---|---|
| | | Prosecution PW 6 |
| Deposition of Witness for | | Defence |
| | | Court |
| Name | : | டாக்டர்.கே.எஸ்.முருகேசன் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 24.06.2024

**எதிரி ஆஜரில்லை. 317 குவிமுசவின் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது கரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் தோல்நோய் சிறப்பு மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 29.07.2018ம் தேதி இரவு 09.40 மணியளவில் நான் பணியிலிருந்தபோது ஆறுமுகம் என்பவரை அவரது நண்பர் தினேஷ் என்பவர் சிகிச்சைக்காக அழைத்து வந்தார். அவரை நான் பரிசோதித்தபோது அவர் சுயநினைவுடன் இருந்தார். அவர் தன்னை

ஒம்/.எஸ்.பி.பரத் குமார்
நீதித்துறை நடுவர் எண்.1,
கரூர்.

இரவு 08.45 மணியளவில் கங்கா பார்சல் அலுவலகத்தில் தூங்கிக்கொண்டிருந்தபோது தெரிந்த ஒரு நபர் கத்தி போன்ற ஆயுதத்தால் தாக்கியதாக ஏற்பட்ட காயங்கள் என கூறினார். அவரை நான் பரிசோதித்தபோது காயம் 1, 5x 2 cm எலும்பு ஆளமுடைய கிழிந்த காயம் தலையின் இடதுபுறத்தில் காணப்பட்டது. காயம் 2. 7x 2 cm எலும்பு ஆளமுடைய முக்கால்வாசி வெட்டுப்பட்ட இடது கட்டைவிரல் வெட்டுப்பட்டு காணப்பட்டது. காயம் 3. 2 x 1x 0.05 cm கிழிந்த காயம் இடது காதில் காணப்பட்டது. அவரை நான் உள்நோயளியாக அனுமதித்து சிகிச்சையளிக்கப்பட்டது. அவருக்கு இடது கைக்கு நுண்கதிர் படம் எடுக்கப்பட்டது. அவருக்கு அதில் முதல் மெட்டாக்கார்ப் எலும்பு முறிவு காணப்பட்டது. முகத்திற்கு சிடிஸ்கேன் எடுக்கப்பட்டது.

2. அதில் இடது முன்பக்க தலை left fontal எலும்பு உடைந்து காணப்பட்டது. அவருக்கு எலும்பு முறிவு மருத்துவர் அளித்த சிகிச்சையின் கருத்துரைப்படி அவர் மருத்துவரின் ஆலோசனைக்கு புறம்பாக தன்னிச்சையாக மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்டார். அவர் மருத்துவமனையில் இருந்தபோது அவருக்கு அளிக்கப்பட்ட சிகிச்சையின் அடிப்படையில் காயம் 1, காயம் 2 கொடுங்காயம் என சாட்றளித்தேன். விபத்து பதிவேட்டு அறிக்கை**,** காயச்சான்றிதழ் முறையே அ**.**சா**.**ஆ**.3, 4** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.** அன்றைய தினமே அதே சம்பவத்தில் காயமடைந்ததாக கார்த்திகேயம் என்பவரை அவரது நண்பர் தினேஷ் என்பவர் சிகிச்சைக்காக அழைத்து வந்தார். அவரைநான் பரிசோதித்தபோது அவர் தன்னை இரவு 08.45 மணியளவில் கங்கா பார்சல் சர்வீஸ் அலுவலகத்தில் தெரிந்த ஒரு நபர் கத்தி போன்ற ஆயுதத்தால் தன்னை தாக்கியதாகவும், அதனால் காயம் ஏற்பட்டதாகவும் கூறினார். அவருக்கு ஏற்பட்ட காயம் 1. 6x3 cm எலும்பு ஆளமுடைய கிழிந்த காயம் இடது மணிக்கட்டில் காணப்பட்டது. காயம் 2. 5x3 cm சதையளவு ஆழமுடைய கிழிந்த காயம் இடது முன்கையில் காணப்பட்டது. காயம் 3. 4x2 cm சதையளவு ஆழமுடைய கிழிந்த காயம் இடது முன்கையில் காணப்பட்டது. அவரை நான் உள்நோயாளியாக அனுமதிக்க பரிந்துரைத்தேன். கார்த்திகேயனுக்கு வழங்கப்பட்ட விபத்து பதிவேட்டுஅறிக்கை அ**.**சா**.**ஆ**. 5** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.** போலிசார் என்னை விசாரித்தனர்.

### குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)

1. நோயாளி ஆறுமுகம் மருத்துவமனைக்கு வந்தபோது அவர் மீது மதுவாடை அடித்தது. நான் எலும்பு முறிவு மருத்துவர் அல்ல. நான் ரேடியோலஜிஸ்ட் அல்ல. ஆறுமுகத்திற்கு எடுக்கப்பட்ட

ஒம்/.எஸ்.பி.பரத் குமார்
நீதித்துறை நடுவர் எண்.1,
கரூர்.

நுண்கதிர்படம் அல்லது சிடிஸ்கேன் போன்றவைகளை நான் போலிசாரிடம் ஒப்படைக்கவில்லை. அதற்கு காரணம் நோயாளிக்கு சிகிச்சையளித்த மருத்தவர் நானல்ல. எலும்பு முறிவு மருத்துவர் அளித்த கருத்துரை அல்லது ரேடியோலஜிஸ்ட் அளித்த கருத்துரை எனது சான்றிதழுடன் இணைத்து போலிசாருக்கு கொடுக்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் சம்படந்தப்பட்ட ஆயுதத்தை நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். பொதுவாக கத்தி போன்ற ஆயுதம் என்றால் கூர்மையான ஆயுதம் என்றால் இருக்கலாம். கிழிந்த காயங்கள் பொதுவாக மழுங்கிய, கூர்மையற்ற ஆயுதங்களால் ஏற்படும். நான் பார்வையுற்ற காயங்கள் அனைத்தும் கிழிந்த காயங்கள் தான் என்றால் சரிதான்.

2. கார்த்திகேயன் மருத்துவமனைக்கு வந்தபோது அவர் மீது மதுவாடை அடித்தது. நான் எலும்பு முறிவு மருத்துவர் அல்ல. நான் ரேடியோலஜிஸ்ட் அல்ல. ஆறுமுகத்திற்கு எடுக்கப்பட்ட நுண்கதிர்படம் அல்லது சிடிஸ்கேன் போன்றவைகளை நான் போலிசாரிடம் ஒப்படைக்கவில்லை. அதற்கு காரணம் நோயாளிக்கு சிகிச்சையளித்த மருத்தவர் நானல்ல. எலும்பு முறிவு மருத்துவர் அளித்த கருத்துரை அல்லது ரேடியோலஜிஸ்ட் அளித்த கருத்துரை எனது சான்றிதழுடன் இணைத்து போலிசாருக்கு கொடுக்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் சம்படந்தப்பட்ட ஆயுதத்தை நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். பொதுவாக கத்தி போன்ற ஆயுதம் என்றால் கூர்மையான ஆயுதம் என்றால் இருக்கலாம். கிழிந்த காயங்கள் பொதுவாக மழுங்கிய, கூர்மையற்ற ஆயுதங்களால் ஏற்படும். நான் பார்வையுற்ற காயங்கள் அனைத்தும் கிழிந்த காயங்கள் தான் என்றால் சரிதான். நான் ஆறுமுகத்திற்கு கொடுத்த இறுதி கருத்துரை முடிவானது அல்ல என்றால் சரிதான். அவர் மருத்துவ ஆலோசனைக்கு எதிராக சென்றுவிட்டதால் இருக்கும் ஆதாரங்களை வைத்து கருத்துரை

ஒம்/.எஸ்.பி.பரத் குமார்
நீதித்துறை நடுவர் எண்.1,
கரூர்.

வழங்கினேன். நான் கார்த்திகேயனுக்கு எந்த கருத்துரையும் வழங்கவில்லை. அதற்கு காரணம் விபத்து பதிவேடு மட்டுமே நான் அளித்தேன்.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/.எஸ்.பி.பரத் குமார்
நீதித்துறை நடுவர் எண்.1,
கரூர்.